அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 350

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு. 7
12, நவம்பர், 1986.

எல்லா அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்.

கடமைவேளையில் காயப்படும் அரச உத்தியோகத்தர்களுக்கான நட்ட ஈடு-1986 ஒக்தோபர் 8ஆம் திகதிய 346ஆம் இலக்கஅரசாங்கநிர்வாகச் சுற்றறிக்கைக்கான திருத்தம்

1986 ஒக்தோபர் 8ஆம் திகதிய 346ஆம் இலக்கச் சுற்றறிக்கையை தயவு செய்து பின்வருமாறு திருத்திக் கொள்ளவும்:-

2. பந்தி 3 (எ)யிலுள்ள கடைசி வசனத்தை நீக்கி அதற்குப் பதிலாக பின்வருபவைவற்றை தயவு செய்து புகுத்தவும்:-

"மேலே குறிப்பிட்ட காயம் தொடர்பில் தகைமை பெறுவதற்கான வகைப்படுத்துதல் சுகாதார சேவைகள் பிரதேசம் பணிப்பாளரால் அல்லது கொழும்பு பெரிய மருத்துவசாலை பணிப்பாளரால் (போதனை) நியமிக்கப்படும் மருத்துவ சபையால் செய்யப்படும்."

3. பந்தி 4(1)(பி)யை நீக்கி அதற்குப் பதிலீடாக இங்கு தரப்பட்டுள்ளதை புகுத்தவும்:-

"அவர் உடனடியாக அப்பிரதேசத்தின் சுகாதார சேவைகள் பிரதேசப் பணிப்பாளருக்கோ அல்லது கொழும்புப் பெரிய மருத்துவசாலைப் பணிப்பாளருக்கோ (போதனை) ஒரு மருத்துவ சபையை நியமிக்கும்படி விண்ணப்பிக்க வேண்டும்."

4. பந்தி 4(11)ஐ நீக்கி அதற்குப் பதிலீடாக இங்கு தரப்பட்டதை புகுத்தவும்:-

"இந்த ஏற்பாடுகளுக்கு அமைந்து நடப்பதற்கு வேண்டிய தொடர்புடைய எல்லா ஆளணியினருக்கும் சுகாதார அமைச்சின் செயலாளரும், பெண்கள் விவகார மருத்துவ போதனை அமைச்சின் செயலாளரும் அறிவுறுத்துரைகளை வழங்க வேண்டும்."

ஒப்பம்: டி.பி.ஜ.பி.எஸ். சிறிவர்தன.
செயலாளர்,